2. ஒத்திவைப்புத் தீர்மானம்

சங்கரன் கோவிலில் விசைத்தறி உரிமையாளர்களின் கீழ் பணியாற்றுகிற தொழிலாளர்கள் கூலி உயர்வு கோரி நடத்தும் போராட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்பு தீர்மானம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் 'நெல்லை மாவட்டம்' சங்கரன்கோவிலில் விசைத்தறி உரிமையாளர்களுக்கும் அதிலே பணியாற்றுகிற தொழிலாளர் களுக்கும் கூலி உயர்வு பற்றிய பிரச்சினையில் ஏற்பட்டுள்ள தகராறுகள் காரணத்தால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள பிரச்சினை (குறுக்கீடு) குறித்து பேரவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோரி அதற்கான அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கும் அளவுக்கு இது எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக் கொள்கிறேன். திரு. ஆர். சிங்காரம். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு பிரச்சினைக்கு அனுமதி கோரி இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 9.50 மணிக்கு என்னிடத்தில் கொடுத்திருந்தீர்கள். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: நான் கோரியது முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்த அறிவிப்புக்கு ஏற்கெனவே என்னால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) எனவே, அந்தப் பிரச்சினைக்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. சிங்காரம் அவர்கள் ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்திருக்கிறார். அதை எடுத்திருக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம் எடுக்கப்படுகிறபோது வேறு பிரச்சினைகளை எடுப்பதில்லை. ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்திருப்பதற்கு என்னுடைய அறையில் வந்துதான் கேட்க வேண்டும். (குறுக்கீடுகள்) நான் அனுமதி மறுத்த பிரச்சினையை நீங்கள்

என்னுடைய அறையில் வந்து தான் கேட்கவேண்டும். (குறுக்கீடுகள்) நான் அனுமதி மறுத்த எந்தப் பிரச்சினையையும் பேரவையில் எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) விதிகளில் தெளிவாக இருக்கிறது. நான் அனுமதி மறுத்ததற்குப் பிறகு பேரவையில் அதை எந்தவகையிலும் எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : முக்கியமான பிரச்சினை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதி மறுத்து உங்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பும் கொடுத்திருக்கிறேன். அதற்குப் பிறகு எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) சிங்காரம் உங்கள் பிரச்சினையை எழப்பலாம். (குறுக்கீடுகள்).

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், சங்கரன்கோவில் நகரில் . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் ஒரு உறுப்பினரை இப்படி மிரட்டக்கூடாது. இது அத்துமீறிய செயல். உங்கள் கட்சி உறுப்பினராக இருக்கலாம். அவர் இந்த அவையின் உறுப்பினர். அவரை மிரட்டுகிற அதிகாரம் உங்களுக்குத் துளியும் கிடையாது. (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினராக இருந்தால் வெளியே வைத்து மிரட்டலாம், எனக்கு கவலை இல்லை, இந்த அவைக்குள் ஒரு உறுப்பினரை மிரட்டுகிற அதிகாரம் எதிர்க்கட்சித் தலைவருக்கு இல்லை. (குறுக்கீடுகள்) மிரட்டுகிற அதிகாரம் எங்கே இருக்கிறது? (குறுக்கீடுகள்) டேனியல் ராஜ், ஒரு உறுப்பினரை நீங்கள் அவர் இருக்கைக்குச் சென்று இப்படி மிரட்டுவது சரியல்ல. டேனியல் ராஜ், இது விதிமுறைகளுக்கு முற்றிலும் புறம்பான காரியம். (குறுக்கீடுகள்) டேனியல் ராஜ், பி.வி.ராஜேந்திரன், ஞானசேகரன், ஒரு உறுப்பினரை, அவர் இருக்கிற இடத்தை நோக்கித் திரும்பி மிரட்டுவது சரியல்ல. (குறுக்கீடுகள்) சிங்காரம் நீங்கள் திரும்ப வேண்டியதில்லை. அவர்கள் திட்டமிட்டுக் குழப்பம்செய்ய வேண்டுமென்று வந்திருக்கிறார்கள். சிங்காரம் நீங்கள் பேசலாம். நான் அனுமதி அளித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் அனுமதி அளித்திருக்கிறபோது ஒரு உறுப்பினரை கையை நீட்டிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) சண்முகம், தாமரைக்கனி, உங்கள் இருக்கைகளுக்குச் செல்லவும்.

முற்பகல் 11.20.

டேனியல் ராஜ், உங்கள் இருக்கைக்குச் செல்லவும். (குறுக்கீடுகள்) டேனியல் ராஜ், உங்கள் இருக்கைக்குச் செல்லவேண்டும். (குறுக்கீடுகள்) பீட்டர் அல்போன்ஸ் தன் இருக்கையிலிருந்து சென்று, திரு. சிங்காரத்தை மிரட்டுவது முறையல்ல. பி.வி. ராஜேந்திரன், உங்கள் இருக்கையிலிருந்து திரும்பி, இவ்வாறு நடப்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) பி.வி. ராஜேந்திரன், இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இல்லை, நான் உங்களுக்கு அனுமதி மறுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுக்கு நான் அனுமதி மறுத்து

இருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு அனுமதி மறுத்து இருக்கிறேன். மறுத்த பிரச்சினையைப் பற்றி என்னுடைய அறையிலே வந்துதான் கேட்கவேண்டும். (குறுக்கீடுகள்) திரு. சிங்காரம். உங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எழுப்பலாம். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: எனக்குப் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை என்னுடைய அறையிலே வந்து கேட்கவேண்டும். (குறுக்கீடுகள்) என் அறையிலே வந்து கேட்கவேண்டும். (குறுக்கீடுகள்) நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். நீங்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, அதை நான் மறுத்து இருக்கிறேன். மறுத்த பிரச்சினையை எந்த வகையிலேயும் எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) அனுமதி மறுத்ததை இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) நான் அனுமதி மறுத்த பிரச்சினையை எந்த வகையிலேயும் எழுப்ப முடியாது. திரு. சிங்காரம் அவர்களைப் பேச நான் அனுமதித்து இருக்கிறேன். திரு. சிங்காரத்தை பக்கத்திலே இருக்கிற உறுப்பினர்கள் . . . (குறுக்கீடுகள்)

திரு. ஆர். சிங்காரம்: நெல்லை மாவட்டம், சங்கரன்கோவில் நகரத்தில் (குறுக்கீடுகள்) 10 ஆயிரம் தொழிலாளர்கள் இன்றைக்கு கூலி உயர்வு பிரச்சினை காரணமாக வேலைக்குச் செல்ல முடியாமல், அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இருவகை முதலாளிகளுக்கும் (குறுக்கீடுகள்) 10 ஆயிரம் தொழிலாளர்களுக்கும் இடையே 18-12-1993 அன்றிலிருந்து போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) தொழிற்சங்கங்களினுடைய பொதுச் செயலாளர், திரு. குணசேகரன் . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர், ஒரு உறுப்பினர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எழுப்பிக் கொண்டிருக்கிறபோது, இப்படி முறைகேடாக அவரைத் தடுப்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) பேரவை விதி 58:

`` The Speaker may withhold consent to the matter being raised before the House and in that case it shall be communicated to the member together with the reasons therefor and the member shall not raise the matter as such in the House."

ஆகவே, அந்த விதிக்குப் புறம்பாக நீங்கள் பேசிக் கொண்டிருப்பது முறையல்ல. (குறிக்கீடுகள்) அந்த விதிக்குப் புறம்பாக பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். இன்னொரு உறுப்பினரைப் பேசவிடாமல் திட்டமிட்டு மிரட்டி, பேசவிடாமல் தடுக்கிறீர்கள். இன்னொரு உறுப்பினரைத் தடுப்பது

முறையல்ல. (குறுக்கீடுகள்) அப்படி, ஒன்றுக்கு இரண்டு, மூன்று விதிகளையும் மீறி, எதிர்க்கட்சித் தலைவர் இப்படி நடந்துக் கொண்டு இருப்பது முறையல்ல. நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். ஏன் என்றால், இன்னொரு உறுப்பினரை மிரட்டுகிறீர்கள். (குறுக்கீடுகள்) இது முறையில்லாத தொனி. அதை இந்த அவை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இந்த அவை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் திரு.எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன் அமரவேண்டும். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்ரமணியன், அவையைவிட்டு வெளியேற வேண்டும். திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவையைவிட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடுகள்) மார்ஷல், எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்ரமணியன் அவர்களை, காவலர்கள் துணை கொண்டு வெளியேற்றலாம். (குறுக்கீடுகள்)

(திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் வெளியேற்றப்பட்டார்.)

டேனியல்ராஜ், உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்) டேனியல்ராஜ், உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்) டேனியல்ராஜ், உட்காரவேண்டும், உட்கார முடியாது என்றால், தாங்கள் அவையைவிட்டு வெளியேறலாம். (குறுக்கீடுகள்) டேனியல்ராஜ், அவையைவிட்டு வெளியேற உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) டேனியல்ராஜ் அவர்களை அவையைவிட்டு வெளியேற்ற காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

(திரு .எஸ். டேனியல்ராஜ், பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்)

திரு. ஆண்டி அம்பலம், அமரவேண்டும், அல்லது பேரவையைவிட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடுகள்) ஆண்டி அம்பலத்தை வெளியேற்ற உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

(திரு. எம். ஆண்டி அம்பலம் பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்)

திரு. மா. சுந்தரதாஸ், அமரவேண்டும், அல்லது வெளியேற வேண்டும். (குறுக்கீடுகள்) அமரவேண்டும் அல்லது வெளியேற வேண்டும் (குறுக்கீடுகள்) சுந்தரதாசை வெளியேற்றவும். (குறுக்கீடுகள்)

(திரு. மா. சுந்தரதாஸ் பேரவைக் காவலர்களால் வெளியேற்றப் பட்டார்)

பேரவையின் அலுவல்களுக்கு நின்று குந்தகம் செய்து கொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களை வெளியேற்றலாம். (குறுக்கீடுகள்)

பேரவையின் அலுவல்களுக்கு நின்று கொண்டு கோஷம் எழுப்பிக் கொண்டு, குந்தகம் செய்து கொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றலாம். வெளியேற்றுமாறு காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அறைக்கு வாருங்கள் சொல்கிறேன். *(கூச்சல் —குழப்பம்)*

முற்பகல் 11.25

(நின்றுகொண்டு கோஷம் எழுப்பிக்கொண்டு அலுவல்களுக்குக் குந்தகம் செய்து கொண்டிருந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளியேற்றப் பட்டார்கள்)

(திரு. சி. ஞானசேகரன் மாண்புமிகு பேரவைத் தலைவரின் மேடைக்கு அருகே வந்து அமர்ந்தார்)

ஞானசேகரனைப் போல மதிபேதகமான ஆள்கூட இந்த அளவிற்கு நடந்து கொள்ள மாட்டார்கள்.

(திரு. சி. ஞானசேகரன் பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பபட்டார்)

ஞானசேகரனைப் போல மதிபேதகம் அடைந்திருந்தவர்கள் கூட இப்போது அவர் நடந்து கொண்டதைப் போல நடந்துகொள்ள மாட்டார்கள் (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு, நீங்கள் இங்கே எந்தப் பிரச்சினையையும் இப்போது எழுப்புவதற்கு அறிவிப்புக் கொடுக்கவில்லை. நான் இப்போது ஒத்திவைப்புத் தீர்மானம் எழுப்ப இன்னொரு உறுப்பினருக்கு அனுமதித்திருக்கிறபோது வேறு எந்தப் பிரச்சினையையும் எழுப்புவதற்கு அனுமதி இல்லை. நான் அனுமதித்து, திரு. சிங்காரம் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) அவரை மிரட்டிய காரணத்தால் . . . (குறுக்கீடு) அவர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நேற்றைய புரொசீடிங்சைப் பற்றி பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய புரொசீடிங்சைப் பற்றி நேற்றே எழுப்பியிருக்க வேண்டும் அல்லது அறிவிப்புக் கொடுக்கவேண்டும். நேற்றைய புரொசீடிங்சைப் பற்றி எழுப்புவதற்கு அறிவிப்புக் கொடுக்கவேண்டும். அறிவிப்புக் கொடுக்காமல் எழுப்ப முடியாது. உட்காரவும் அல்லது வெளியேறவும். (குறுக்கீடு) மார்ஷல், திரு. திருநாவுக்கரசை அப்புறப்படுத்தவும். திரு. எஸ். திருநாவுக்கரசு *(பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்)*

(திரு. எஸ். திருநாவுக்கரசு பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்)

(கூச்சல் குழப்பம்) புத்தகத்தை எடுத்து, திரு. சண்முகம், திரு. அப்பு நடேசன் ஆகியோரைத் தாக்கிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினரின் செய்கை அடாவடித்தனமானது என்று அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி அடாவடித்தனம் செய்து இந்தப் பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்திவிட முடியாது. மிகக் கடுமையான நடவடிக்கைக்கு காங்கிரஸ் கட்சியின் அத்தகைய அடாவடித்தனமான உறுப்பினர் ஆளாக வேண்டிவரும். இங்கே அமர்ந்திருக்கிற உறுப்பினர்களை நோக்கி புத்தகக் கட்டை எறிகிற அந்தச் செய்கை கண்டிக்கத்தக்கது. இந்த அடாவடித்தனத்தை அவையின் சார்பில் கடுமையாகக் கண்டிக்கிறேன். வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் யார் லாபியில் இருந்தாலும் அவர்களை அப்புறப்படுத்தி வெளியேற்றக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களைத் தூக்கி அப்புறப்படுத்தலாம்.

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவைப் பணிகளினின்றும் உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்.

திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியிலே செல்கின்றபோது வெளியேயிருந்து இங்கே உள்ளே அமர்ந்திருக்கின்ற திருவட்டாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்பு நடேசன் மீது பி. வி. இராஜேந்திரன் அவர்கள் புத்தகக்கட்டைத் தூக்கி அவர்கள் மேலே எறிந்தார்கள். எனவே அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு, உச்சகட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்தகைய அடாவடித்தனமான செய்கையிலே ஈடுபட்ட பி. வி. இராஜேந்திரன் என்பவர் இந்தப் பேரவையின் கடுமையான நடவடிக்கைக்கு உரியவர் ஆவார். இப்போது பேரவையின் விதி 120- ன் கீழ் நானே நடவடிக்கை எடுத்து வெளியேற்றியிருக்கிறேன். மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதற்குப் பேரவை முன்னவர் அவர்கள்தான் தீர்மானமாக முன்மொழிய வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் இந்தப் பேரவையினுடைய கண்ணியத்தைக் குறைக்கின்ற வகையிலேயும் முறை தவறாக நடக்கின்ற தன்மையிலேயும் நடந்துகொண்டு, வன்முறையிலே

ஈடுபட்டு, பேரவையின் அலுவல்கள் நடைபெறாது இடைமறித்து, பேரவையின் விதிகளைத் தொடர்ந்து முறையற்றுப் பயன்படுத்துவதால் சட்டமன்ற பேரவையின் விதி 121 உள்விதியின்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திரு. பி. வி. ராஜேந்திரன் அவர்களைத் தற்காலிகமாக இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் நிறுத்தி வைக்கலாம்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

முற்பகல் 11.30

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, அதேமாதிரி சிங்காரத்தினுடைய கழுத்தை பிடித்து நெருக்கினார், திரு. ஞானசேகரன் அவர்கள். அதுவும் தவறு. அவர் மீதும் நடவடிக்கை எடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி, நீங்கள் தெரிவிப்பது வேறு. ஆனால் அது சம்பந்தப்பட்ட உறுப்பினர் திரு. அப்பு நடேசன் அவர்களே அந்த கூச்சல் குழப்பத்தின்போது தெரிவித்த பிரச்சினை. நீங்கள் சொல்வது குறித்து திரு. சிங்காரம் அவர்கள் எழுப்பாத காரணத்தால் இந்தப் பிரச்சினை விட்டுவிடப்படுகிறது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை. (குறுக்கீடு)

திரு. ஆர். சிங்காரம்: அவர்களை மன்னித்து விட்டுவிடலாம் என்று நான் உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓட்டெடுப்பு நேரத்திலே வேறு எதுவும் கூடாது. இல்லை, அவை நடவடிக்கை எடுப்பதற்காக வாக்கெடுப்புக்கு விடும்போது நீங்கள் எதுவும் கேட்பதற்கு இல்லை. நீங்கள் முன்னாடியே கேட்டிருக்க வேண்டும். ஓட்டு எடுப்பு நேரத்திலே கிடையாது.

தீர்மானத்தை ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

தீர்மானத்தை ஏற்போரே அதிகம்

எனவே தீர்மானம் நிறைவேறியது.

திரு. பி. வி. ராஜேந்திரன் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் பேரவையிலிருந்து நீக்கி வைக்கப்பெறுகிறார் என்பதை அறிவிக்கிறேன். பேரவை வளாகத்தில் எந்தப் பகுதியில் திரு. பி. வி. ராஜேந்திரன் இருந்தாலும் அவரை அப்புறப்படுத்துகிற அதிகாரத்தைக் காவலர்களுக்கு அளிக்கிறேன் திரு. ஆர். சிங்காரம்.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

சங்கரன் கோவிலில் விசைத்தறி உரிமையாளர்களின்கீழ் பணியாற்றுகிற தொழிலாளர்கள் கூலி உயர்வு கோரி நடத்தும் போராட்டம் குறித்து—தொடர்ச்சி.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில் நகரில் தனியார் விசைத்தறி உரிமையாளர்கள் சுமார் 20 பேர்களுக்கும், அதில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சுமார் 10 ஆயிரம் பேர்களுக்கும் கூலி உயர்வு பற்றிய பிரச்சினை காரணமாக கடந்த 18-12-1993 முதல் தொழிலாளர்கள் வேலைக்கு செல்லாமல் போராடி வருகிறார்கள். அதற்கிடையில் விசைத்தறி உரிமையாளர்களும் சில தொழிற்சங்கத் தலைவர்களும் அவசர அவசரமாக 27-12-1993 அன்று 15 சதவீதம் கூலி உயர்வு கொடுப்பதாக உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதில் அரசு அதிகாரிகளோ ஏனைய தொழிற்சங்கப் பிரதிநிதிகளோ கலந்து கொள்ளவில்லை. இது முற்றிலும் தனியார் விசைத்தறி பிரச்சினை என்பதனால் தனியாராகவே இதில் முடிவெடுத்து இருக்கிறார்கள். ஆனால் இந்தக் கூலி உயர்வு பேச்சு வார்த்தையை பொது இடத்தில் நடத்தாமல் தனியார் ஒருவரின் மாடி வீட்டை பூட்டிக் கொண்டு நடத்தியிருக்கிறார்கள். அதில் கலந்துக் கொள்ளச் சென்ற திரு. குணசேகரன் அவர்களையும் பேச்சு வார்த்தைக்கு அனுமதிக்கவில்லை. திரு. குணசேகரன் அவர்கள் அதிகாரபூர்வமான பதிவு செய்யப்பட்ட நெல்லை மாவட்ட தொழிற்சங்கத்தினுடைய பொது தொழிலாளர்களுடைய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அதனால் நெல்லை மாவட்ட பொதுத் தொழிலாளர்கள் சங்கத்தில் அதிகமான விசைத்தறித் தொழிலாளர்கள் இருப்பதால் இப்பேச்சு வார்த்தையின் முடிவை உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளாமல் இன்றுவரை நகரத்தில் உள்ள சுமார் 15 ஆயிரம் தறிகளும் ஓடாமல் கிடக்கின்றன. பேச்சு வார்த்தையில் கலந்துகொண்ட சங்கத்தைச் சேர்ந்த அந்த உறுப்பினர்களும்கூட, ஒரு நபர்கூட வேலைக்கு செல்லாமல் போராடி வருகிறார்கள். சங்கரன்கோவிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் உள்ள தளவாயில் என்ற ஊரில் விசைத் தறித் தொழிலாளர்களுக்கு 20 சதவீதம் கூலி உயர்வும் கடையநல்லூரில் உள்ள தொழிலாளர்களுக்கு 20 சதவீதம் கூலி உயர்வும் புளியங்குடி தொழிலாளர்களுக்கு 25 சதவீதம் கூலி உயர்வும் வழங்கப்பட்டு இருப்பதால் சங்கரன்கோவிலில் உள்ள தொழிலாளர்கள் 15 சதவீதம் கூலி உயர்வை ஏற்றுக் கொள்ளாமல் தொடர்ந்து ஒட்டு மொத்தமாக தொழிலாளர்கள் குணசேகரன் தலைமையில்

போராடி வருகிறார்கள். ஆகவே இதில் உடனடியாக அரசு தலையிட்டு அந்த தொழிலாளர்களுக்கும் அந்த உரிமையாளர்களுக்கும் இடையிலே இருக்கிற போராட்டத்தை ஒரு முடிவிற்கு கொண்டுவர அந்த தொழிலாளர்கள் சங்கத்தினுடைய செயலாளர் குணசேகரன் அவர்களை அழைத்து வைத்துப் பேசி, ஏனைய சர்வ கட்சித் தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்து வைத்துப் பேசி இதில் ஒரு முடிவிற்குக் கொண்டு வர அரசு உடனடியாக தலையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் கடந்த 30-12-1993 அன்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அமரவேண்டும்.

திரு. ஆர். *சிங்காரம் :* . . . கடந்த 30-12-1993 அன்று ஒட்டு மொத்தத் தொழிலாளர்கள் குணசேகரன் தலைமையில் நகரப் பொது ஹர்த்தால் என அறிவித்து கடை அடைப்பு ஏற்பாடு செய்யப்பட்டபோது உடனே காவல் துறை ஆணையாளர் திரு .பொன்ராஜ் அவர்களும் உதவியாளர் திரு. மாடசாமி அவர்களும் 30-12-1993 அன்று காலை 6 மணிக்கு வீட்டிற்குச் சென்று திரு. குணசேகரனைக் கைது செய்திருக்கிறார்கள். அதைக் கேள்வியுற்ற தொழிலாளர்களை ஒன்றுகூடாமல் தடுக்க தொழிலாளர்களை கடுமையாக லத்தி சார்ஜ் செய்திருக்கிறார்கள். இதையும் மீறித் தொழிலாளர்கள், பெண்கள் கைக்குழந்தைகளுடன் சுமார் 500 பேர்கள் கைது செய்யப்பட்டு காலை முதல் மாலை வரை சங்கரன்கோயில் காவல்நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். பின்பு குணசேகரன் மற்றும் 14 நபர்களை மட்டும் பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு அனுப்பிவிட்டு மற்றவர்களை விடுதலை செய்துவிட்டார்கள். இந்தக் குறிப்பிட்ட 15 நபர்களை நீதிபதி தனது சொந்த ஜாமீனில் விடுதலை செய்திருக்கிறார்.

முற்பகல் 11.35

ஆகவே, இந்த நிலை குறித்து உடனடியாக 10,000 தொழிலாளர்களையும், 20 விசைத்தறி உரிமையாளர்களையும் உடனடியாக கூட்டி வைத்துப் பேசி அவர்களுக்குக் கூலி உயர்வு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு இது குறித்து விரிவாக இந்த அவையில் விவாதிக்க வேண்டிய காரணத்தினால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க அனுமதி கோருகிறேன்.

* **மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் சங்கரன்கோவிலில் உள்ள விசைத்தறி உரிமையாளர் சங்கமும், விசைத்தறி தொழிலாளர் சார்பாக அண்ணா தொழிற்சங்கமும், சி.ஐ.டி.யு தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை, ஐ.என்.டி.யு.சி ஆகிய தொழிற் சங்கங்களும் விசைத்தறித் தொழிலாளர்களின் கூலி உயர்வு சம்பந்தமாக நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தி முடிவில் 26-12-1993 அன்று ஒரு இணக்கமான உடன்படிக்கைக்கு வந்தனர். அதன் அடிப்படையில் விசைத்தறித் தொழிலாளர்களுக்கு இதற்கு முன்பு கொடுத்து வந்த கூலியிலிருந்து 15 விழுக்காடு உயர்த்தி 27-12-1993 முதல் வழங்கவும் விடுப்புச் சம்பளமாக நாள் ஒன்றுக்கு ரூ. 13 வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. இந்த உடன்பாடு இரண்டு ஆண்டுகாலம் அமலில் இருக்கும். இதற்கிடையில் நெல்லை கட்டபொம்மன் மாவட்ட பொதுத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் திரு. குணசேகரன் இந்தக் கூலி உயர்வு போதுமானதாக இல்லை எனத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டார். இந்தத் தொழிற்சங்கம் 30-11-1993 தேதியில்தான் தொழிற்சங்க சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது. 30-12-1993 அன்று இவர் கதவடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வேலைக்குச் சென்ற தொழிலாளர்களைத் தடுக்க முற்பட்டதால் அவரையும் அவருடன் சேர்த்து 14 நபர்களையும் 30-12-1993 அன்று காலை 10 மணியளவில் சங்கரன்கோவில் காவல் நிலைய அதிகாரிகள் கைது செய்து 31-12-1993 அன்று இரவு அவர்கள் அனைவரும் ஜாமீன்பேரில் விடுதலை செய்யப்பட்டனர். மேலும் சங்கரபாண்டியன் மற்றும் 142 நபர்கள் 30-12-1993 அன்று மதியம் 12 மணியளவில் காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அன்று பிற்பகல் 1.30 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர். மீண்டும் குணசேகரனை சம்பந்தப்பட்ட துணை ஆணையாளர் அவர்கள் அழைத்து பேச்சுவார்த்தை நடத்துமாறு கேட்டுக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) இந்தப் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்கிறேன் என்பதைத் தெரிவித்து மீண்டும் இந்த அவையை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டியதில்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப்பின் அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.